# முறையற்ற கழிவு முகாமைத்துவத்தினால் மக்களின் உயிர்வாழ்வு, பொதுச் சொத்துக்கள் மற்றும் சுற்றுச் சூழலிற்கு ஏற்படும் தாக்கங்கள் மீதான கணக்காய்வு - இரத்தினபுரி மாநகர சபை 2012



2013
யூன்

செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வுப் பிரிவு

கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்

# உள்ளடக்கம்


| | பக்க இல. |
|---|---|
| **நிறைவேற்றுப் பொழிப்பு** | 3 |
| **1. அறிமுகம்** | 4 |
| 1.1 கழிவு முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் | 4 |
| 1.2 பின்னணி | 4 |
| 1.3 சட்டப் பின்னணி | 5 |
| 1.4 கணக்காய்விற்கான அதிகாரம் | 5 |
| 1.5 கணக்காய்வு விடயத்தை தெரிவு செய்தலில் தாக்கமளித்த காரணிகள் | 5 |
| 1.6 பருமனளவு | 6 |
| **2. விபரமான அறிக்கை** | 7 |
| 2.1 நகரிலும் நகர எல்லையிலும் குவியும் கழிவுகளை முறையற்ற விதத்தில் அகற்றுவனால் சுற்றாடல் பாதிக்கப்பட்டிருத்தல் | 7 |
| 2.2 கழிவுகளை அகற்றும் பிரதேசத்தின் அருகிலுள்ள மக்களிற்கு ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்கள் மற்றும் அருகிலுள்ள வீதிகள் சேதமடைந்திருத்தல் | 8 |
| 2.3 உக்காத மற்றும் மலக் கழிவுகளை அகற்றுதல் செயற்திட்டம் தோல்வியடைந்திருத்தல். | 9 |
| 2.4 சேதனப் பசளை உற்பத்திக் காலம் ஒப்பீட்டளவில் அதிகமாக இருத்தல் | 11 |
| 2.5 உக்காத கழிவுகள் நிலத்தின் மேல் குவிக்கப்படுவதனால் நிகழும் இராசயனச் செயன்முறையினால் நிலக் கீழ் நீரிற்கு ஏற்படும் பாதகமான தாக்கங்கள் | 12 |
| 2.6 முறையற்ற கழிவு முகாமைத்துவத்தினால் வயல்கள் பற்றையாதல் | 13 |
| **3. கட்டுப்பாட்டு நலிவுகள்** | 14 |
| 3.1 சுகாதாரப் பிரிவின் ஆளணி மற்றும் வாகன நிர்வாகம் | 14 |
| 3.2 காணிகள் மற்றும் ஆதனங்களின் பாதுகாப்பு | 14 |
| **4. நிறுவனத்தின் கருத்துரை** | 15 |
| **5. முடிவுகள்** | 16 |
| **6. பரிந்துரைகள்** | 16 |

## நிறைவேற்றுப் பொழிப்பு

இரத்தினபுரி மாநகர சபையின் உக்காத கழிவு முகாமைத்துவம் முறையற்றிருந்தமை காரணமாக மக்களின் உயிர்வாழும் நிலை பாதகமாவதற்கு தாக்கமளித்திருந்தமையும் சுற்றாடல் மாசடைதல் இடம்பெற்றிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. சில இடங்களில் மண்சரிவுகள் ஏற்படுவதற்கும் இந்த முறையற்ற கழிவு முகாமைத்துவம் காரணமாகியிருந்தமை மேலும் அவதானிப்புச் செய்யப்பட்டது.

கழிவுகள் முகாமைத்துவத்தினை முறைமைப்படுத்தும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்டிருந்த சேதனப் பசளை உற்பத்தி, கழிவுகளில் காணப்பட்ட ஈரப்பதனின் அதிகரிப்புக் காரணமாக தோல்வியடைந்திருந்ததுடன் ரூபா 2,355,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட மலக் கழிவகற்றல் நிலையம் செயற்படாதிருந்தமையின் விளைவாக திறந்த வெளிப் பிரதேசத்திற்கு மலக் கழிவினை அகற்றல் சுற்றாடல் மாசடைதலுக்கு ஏதுவாகியுள்ளது என்பதும் தெளிவாகிறது. ஒட்டுமொத்தமாக நிலக்கீழ் நீர் அசுத்தமடைதல், பயிர்ச் செய்கைக்காக ஒதுக்கப்பட்டிருந்த வயல் வெளிகள் பற்றையாதல் என்பன முறையற்ற கழிவு முகாமைத்துவம் காரணமாக தேசிய ரீதியில் ஏற்படும் பாதிப்புக்களாகும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நிலையினை தவிர்த்துக் கொள்வதற்காக வெற்றிகரமாக கழிவு முகாமைத்துவத்தினை மேற்கொள்ளும் நிறுவனங்களுடன் நெருங்கிய உறவினை பேணிவருவதுடன், கழிவுகளைச் சேகரித்தல், வகைப்படுத்தல் மற்றும் அகற்றுதல் என்பன தொடர்பில் பிரதேச மக்களை விழிப்புணர்ச்சியூட்டல், விசேடமாக பாடசாலைகளை கழிவு முகாமைத்துவச் செயற்திட்டங்களுடன் இணைத்துக்கொள்ளல் முக்கயமாகும் என்பதனை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வைத்தியசாலைக் கழிவுகள், தொலைபேசி சிம் அட்டைகள், சீஎவ்எல் மின்குமிழ்கள் போன்ற மிகவும் பாதிப்பான கழிவுகளை அகற்றுவதற்காக வெற்றிகரமான முறையொன்றை ஏற்படுத்துதல் முக்கியமாகும் என்பதும் கவனத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வாறு வகைப்படுத்திய கழிவுகளை விற்பனை செய்தல், சேதனப் பசளை உற்பத்தி ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் நகர சபையின் வருமான அதிகரிப்புக்கு உறுதுணையாகும். இக்கருமத்தினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக கழிவு முகாமைத்துவத்தில் ஈடுபடும் ஊழியர்களிற்கு சுகாதார உபகரணங்களை வழங்குவதுடன் காலத்திற்குக் காலம் சுகாதாரப் பரிசோதனைகளை மேற்கொள்வதும் முக்கியமாகும்.

இறுதியாக நகர சபையின் வசமுள்ள கழிவு முகாமைத்துவத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள காணிகள் உள்ளிட்ட வளங்களை பயனுள்ள வகையில் ஈடுபடுத்துவதன் பால் கவனயீர்ப்புச் செய்வதற்கு விரும்புகிறேன்.

## முறையற்ற கழிவு முகாமைத்துவத்தினால் மக்களின் உயிர்வாழ்வு, பொதுச் சொத்துக்கள் மற்றும் சுற்றுச் சூழலிற்கு ஏற்படும் தாக்கங்கள் மீதான கணக்காய்வு - 2012 இரத்தினபுரி மாநகர சபை

## 1. அறிமுகம்

### 1.1 கழிவு முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்

கழிவு என்பது மேலும் பயன்பாட்டிற்குப் பொறுத்தமற்ற விடயமொன்றாவதுடன் அது பயன்படுத்தி முடிந்த ஒன்றாக அல்லது ஏதேனும் செயன்முறையொன்றில் வெளியாகும் தேவையற்ற உற்பத்தியொன்றாக இருக்க முடியும். கழிவுகள் மக்களின் ஆரோக்கியத்திற்கும் சுற்றாடலிற்கும் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன் பொறுப்பற்ற முறையில் மேற்கொள்ளப்படுகின்ற கழிவு முகாமைத்துவத்தினால் கழிவுகள் குவிதல், துர்நாற்றம், அருவருப்பான காட்சிகள் போன்ற சுற்றாடலிற்கு அனுகூலமற்ற தாக்கங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. விசேடமாக கதிர்வீச்சு கழிவுகள் மரணத்தினை ஏற்படுத்தும் என்பதுடன் அதன் மூலம் அபாயகரமான நோய்கள் ஏற்பட முடியும். மருத்துவக் கழிவுகள் பாரதூரமான நோய்கள் பரவுவதற்கு அடிப்படைக் காரணியாகலாம். மாசுடன் கூடிய கழிவுகளினால் நோய்கள், மரணங்கள் விசேடமாக பிறவிக் குறைபாடுகள், புற்றுநோய், சுவாசப் பிரச்சினைகள் மற்றும் சரும வியாதிகள் என்பன ஏற்படலாம். சட்ட விரோதமாக குப்பைகள் குவிக்கப்படுவதனால் அருகிலுள்ள நிலக்கீழ் நீரும் மண்ணும் பாதகமான தாக்கத்திற்கு உட்படுகின்றது. பிரதேசத்தினதும் உலகலாவிய சுற்றாடலும் மாசடைவதற்கு வழிவகுப்பதே திட்டங்கள் இன்றி கழிவுகளை அகற்றுவதன் இறுதி விளைவாகும்.

### 1.2 பின்னணி

மாநகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தின் விஸ்தீரணம் 22.18 சதுர கிலோ மீற்றர் ஆவதுடன், மொத்த சனத்தொகை 53,426 ஆகும். மோத்தச் சொத்துக்களின் அளவு 18,858 ஆக இருந்தது. இப் பிரதேசத்தில் நாளாந்தம் குவிகின்ற கழிவுகளின் அளவு 46 மெற்றிக் தொன்கள் ஆவதுடன் அதில் ஏறத்தாழ 30 தொன்கள் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்றன. அந்த அளவினை முகாமைத்துவம் செய்வதற்காக முறையான வேலைத்திட்டமொன்று இது வரைக்கும் காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. நாளாந்தம் பொதுச் சந்தைகள் அடங்கலாக அதிகாரப்பிரதேசத்தில் குவிகின்ற கழிவுகள் நகரத்தின் அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சேதனப் பசளை உற்பத்தி நிலையத்திற்கு அனுப்பப்படுவதுடன் அப் பொருட்கள் சேதனப் பசளை உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்றன. நகரிலும் நகரின் எல்லைக்குள்ளும் சேகரிக்கப்படுகின்ற மேலும் அதிகளவிலான குப்பைகள் கணதொல

திறந்த வெளியில் கொட்டப்படுகின்றது. நகர சபையின் உக்காத கழிவுகள் சேகரித்தல் மற்றும் அகற்றல் கருமத்திற்காக இரண்டு பதிவிலை உத்தியோகத்தர்கள், 04 இரண்டாம் நிலை பதவியணியினர், 47 நிரந்தர தொழிலாளர்கள், 46 அமைய தொழிலாளர்கள் ஆகியோர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 2012 ஆம் ஆண்டில் சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 29,845,965 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இக்கருமத்திற்காக வெவ்வேறு வகைப்பட்ட 13 வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டிருப்பதுடன் 2012 ஆம் ஆண்டில் அவற்றைப் பேணுதல் மற்றும் செயற்படுத்துதல் கிரயம் ரூபா 2,574,261 என்பது வெளிப்பட்டது.

## 1.3 சட்டரீதியான பின்னணி

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 129, 130 மற்றும் 131 ஆம் பிரிவுகளினால் மலக்கழிவகற்றல் மற்றும் கழிவறைகளை சுத்திகரிப்பதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதுடன் 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட இடைக்கால யாப்பு ) அதிகாரச்சட்டத்தின் I முதல் LVII வரையான சகல பகுதிகளையும் அவ்வாறே பின்பற்றுவதற்கும் அதற்கமைய செயற்படுத்துவதற்கும் 1999 யூன் 04 ஆந் திகதி இடம்பெற்ற பொதுச் சபையின் 3(21) ஆம் இலக்க சபை இணக்கப்பாட்டினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அந்த இடைக்கால யாப்பின் XI மற்றும் XII ஆம் பகுதிகளினால் சொல்லப்படுகின்ற குப்பை கூழங்களை அகற்றுதல் மற்றும் கழிவறைகள் சுத்திகரித்தல் தொடர்பான இடைக்கால யாப்பும் அதற்கமைய ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

## 1.4 கணக்காய்விற்கான அதிகாரம்

இரத்தினபுரி மாநகர சபையின் கழிவு முகாமைத்துவம் முறையற்றுக் காணப்பட்டமையால் மக்களின் உயிர்வாழ்வு, பொதுச் சொத்துக்கள் மற்றும் சுற்றுச் சூழலிற்கு ஏற்படும் தாக்கங்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை மற்றும் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 219 மற்றும் 220 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி எனது பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.5 கணக்காய்வு விடயத்தை தெரிவு செய்தலில் தாக்கமளித் காரணிகள்.

மாநகர சபையின் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் பொது மக்களின் முறைப்பாடுகள், வெகுசன ஊடகங்களினூடாக பிரசித்தப்பட்டிருந்ததுடன் பல்வேறு

சந்தர்ப்பங்களில் சபையின் விவாதத்திற்குற்பட்டிருந்த மாநகர சபையினால் சேகரிக்கப்படும் குப்பைகள் கனாதொல திறந்த வெளியில் அகற்றப்படுவதனால் ஏற்பட்டுள்ள சூழல் மாசடைதல், மக்கள் உயிர் வாழ்விற்கு ஏற்பட்டுள்ள தாக்கங்கள், ஆதனங்களிற்கும் காணிகளிற்கும் ஏற்பட்டுள்ள அழிவுகள் மற்றும் நீர் நிலைகளிற்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பில் நிலைமையினை புலனாய்வு செய்வதற்கான தேவைக்கமைய கணக்காய்வின் விடயப்பரப்பு தீர்மானிக்கப்பட்டது.

**1.6 பருமனளவு**

மாநகர சபையினால் பின்வரும் நிர்ணயங்களிற்கமைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதனை உறுதிப்படுத்துவது தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட்டிருந்தது.

(அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குப்பைகளை சபையின் சொத்துக்களாக மாற்றுவதற்கு பொருத்தமான கொள்கைகள் காணப்பட்டனவா மற்றும் அதன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா,

(ஆ) குப்பைகள் மற்றும் மலக்கழிவினை அகற்றுதல் தேசிய சுற்றாடல் கொள்கைக்கமைவாக மேற்கொள்ளப்பட்டதா,

(இ) நீர் நிலைகளிற்கு சேதத்தினை ஏற்படுத்தாதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா,

(ஈ) கழிவு முகாமைத்துவத்திற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள மனித மற்றும் பௌதீக வளங்கள் பயனுள்ள வகையில் உபயோகப்படுத்தப்பட்டிருந்தனவா மற்றும்

(உ) ஈடுபடுத்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் ஆரோக்கியத்தினைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதுமாகும்.

## 2. விபரமான அறிக்கை

### 2.1 நகரிலும் நகர எல்லையிலும் குவியும் கழிவுகளை முறையற்ற வித்தில் அகற்றுவனால் சுற்றாடல் பாதிக்கப்பட்டிருத்தல்

நகர எல்லைப்பகுதிக்குள் காணப்படுகின்ற 22 கி.மீ. கொண்ட பிரதான வீதிகளிலும் 15 கி.மீ. கொண்ட நுழைவு வீதிகளிலும் குவிகின்ற கழிவுகளை அகற்றுதல் இந்த இடத்தில் இடம்பெறுகிறது. இக்காணி 25 ஏக்கர் 01 ரூட் 20 பர்சஸ் விஸ்தீரணம் கொண்டதுடன் 1123 ஆம் இலக்க 1960 மார்ச் 25 ஆந் திகதியினால் நகர சபைக்கு கையேற்கப்பட்டிருந்தது. கழிவுகளை அகற்றும் இடத்திற்கு எடுத்துவரப்படுகின்ற குப்பைகள் அங்குள்ள மேட்டுநிலத்திலிருந்து பள்ளத்திற்கு முறையற்ற விதத்தில் கொட்டப்படுகின்றது. ஏறத்தாழ 100 ஆண்டுகளிற்கு முன்னிருந்து இவ்வாறு குப்பைகள் கொட்டப்படுவது வெளிப்பட்டது. அவ்வாறே இக்குப்பை மேடு தற்போது எரிக்கப்பட்டு வருவதுடன் சுற்றாடலிற்குப் பாதகமான வாயுக்கள் விடுவிக்கப்படுகின்றதா இல்லையா என்பது குறித்தும் அவ்வாறான நிலை காணப்படின் அந்நிலையினைத் தவிர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா என்பதற்கான சான்றுகளும் காணப்படவில்லை. அவ்வாறே கழிவுகளாக அகற்றப்படுகின்ற பிளாஸ்ரிக், கார்ட்போர்ட், சுத்தமான பொலித்தின் மற்றும் விற்பனை செய்யப்படக்கூடிய ஏனைய பொருட்களை சேகரிக்கும் தொழிலாளர்களினால் அவற்றைக் கொள்வனவு செய்யும் இடங்களிற்கு விற்பனை செய்வதற்காக கழிவுகளிலிருந்து அவை வேறாக்கப்படுவதுடன் உக்காத சொப்பிங் உறைகள் அடங்கலான பொலித்தின்கள் அவ்விடத்தில் வைக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருப்பதனால் மக்களின் சுகாதார நிலைக்கும் அவ்வாறே சுற்றாடல் சமநிலைக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை படங்கள் 1, 2 மற்றும் 3 இன் மூலம் தெளிவாகிறது.



படம் 1 – குப்பைகள் எடுத்துவரப்பட்டு மேட்டிலிருந்து பள்ளத்திற்கு கொட்டப்படுத்தல்



படம் 2 – தீப்பற்றி எரியும் குப்பை மேடு



படம் 3 – முறையற்ற விதத்தில் அகற்றப்பட்டுள்ள குப்பைகள்

## 2.2 கழிவுகளை அகற்றும் பிரதேசத்தின் அருகிலுள்ள மக்களிற்கு ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்கள் மற்றும் அருகிலுள்ள வீதிகள் சேதமடைந்திருத்தல்

கடந்த காலங்களில் இக்குப்பை மேடு சரிவுக்குட்பட்டிருந்தது. இதன் காரணமாக மேட்டின் சரிவில் வசித்து வந்த 23 குடும்பங்கள் அங்கிருந்து அகற்றப்பட்டு கொலுவாவில பிரதேசத்தில் மாற்றுக் காணி வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே குப்பை மேடு சரிவுக்குட்பட்டிருந்தமையால் நகர சபையின் கிராமங்களிற்குச் செல்லும் வீதிகள் மூழ்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வீதிகளை முன்னைய நிலைக்கு கொண்டு வருவதற்கும் எதிர்காலத்தில் மீண்டுமொரு முறை குப்பை மேடு சரிவுக்குட்படக் கூடிய அச்சுறுத்தலை தவிர்ப்பதற்காக சப்ரகமுவ மாகாண சபையின் முதலமைச்சினால் கணதொல குப்பைகள் அகற்றல் நிலத்தின் மேம்படுத்தலின் கீழ் ரூபா 2,522,889 செலவு மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த

போதிலும் அந்த நடவடிக்கைகள் இது வரை பூரணப்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. காணப்படும் நிலைமை படங்கள் 4, 5 மற்றும் 6 இன் மூலம் தெளிவாகின்றது.



படம் 4 – சரிவிற்குட்பட்டுள்ள குப்பை மேடு



படம் 5 – வீதியினை சீர்படுத்தல் மற்றும் மணல் மேடு நிர்மாணித்தல்



படம் 6 – குடியிருப்பாளர் அகற்றப்பட்ட வீடு

## 2.3 உக்காத மற்றும் மலக் கழிவுகளை அகற்றுதல் செயற்திட்டம் தோல்வியடைந்திருத்தல்.

உக்காத கழிவுகள் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் கீழ் கணாதொலவில் உக்காத மற்றும் மலக் கழிவுகளை அகற்றும் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,391,264 செலவு மதிப்பீட்டொன்றை அடிப்படையாகக் கொண்டு அதற்காக ரூபா 2,355,000 செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும் இப்பிரிவு முறையாக பேணிவரப்பட்டிருக்காமை காரணமாக தோல்வியடைந்திருந்தமையால் தற்போது ஏறத்தாழ 05 ஆண்டு காலமாக அவ்விடத்திற்கு எடுத்துவரப்படுகின்ற மலக் கழிவுகள், குப்பைகள் அகற்றப்படுகின்ற இடத்திலேயே அகற்றப்படுகின்றமை வெளிப்பட்டது. இரத்தினபுரி மாநகர சபையினால் மாதமொன்றிற்கு 70 – 75 வரை மலக் கழிவு

ஏற்றிவருதல்கள் அகற்றப்படுவதாகவும் அதற்கு மேலாக குருவிட பிரதேச சபையினால் எடுத்து வரப்படுகின்ற மலக் கழிவுகளும் அந்த இடத்திலேயே திறந்த வெளிச் சுற்றாடலிற்கு விடுவிக்கப்படுவதும் வெளிப்பட்டது. அதன் படி, இதற்காக செய்யப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாகியிருந்ததுடன் இந்நிலை மக்களின் ஆரோக்கியத்திற்கும் சுற்றாலிற்கும் பாதகமானதாகும் என்பது அவதானிக்கப்பட்டது. அந்நிலமை படங்கள் 7, 8, 9 மற்றும் 10 இனால் தெளிவாகின்றது.



படம் 7 - குருவிட பிரதேச சபையினால் எடுத்துவரப்படும் மலக் கழிவு



படம் 8 – மலக்கழிவுகள் அகற்றப்படும் திறந்த வெளி





படங்கள் 9, 10 - ரூபா 2,355,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் கைவிடப்பட்டுள்ள மலக் கழிவு மீள் சுழற்சிப் பிரிவு

## 2.4 சேதனப் பசளை உற்பத்திக் காலம் ஒப்பீட்டளவில் அதிகமாக இருத்தல்

சேதனப் பசளை தயாரிப்பதற்காக 40’ x 80’ அளவு கொண்ட 02 திறந்த கட்டிடங்களும் சேதனப் பசளை தயாரிப்பதற்காக 60’ x 20’ அளவு கொண்ட அரைவாசி மறைக்கப்பட்ட கட்டிடமொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இவ்விடத்தை மேம்படுத்துவதற்காக 2009 ஆம் ஆண்டில் சப்ரகமுவ மாகாண சபையால் ரூபா 882,227 ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற குப்பைகள் சேதனப் பசளை உற்பத்திக்காக இவ்விடத்தில் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றது. இந்த இடத்தில் சேதனப் பசளை உற்பத்திக்காக பயன்படுத்திக் கொள்ளப்படுகின்ற குப்பைகளில் அடங்கியுள்ள நீரின் அளவு மிக அதிகமாக உள்ளதனால் அவற்றை சேதனப் பசளையாக மாற்றுவதற்கு அண்ணளவாக 03 மாதங்கள் எடுத்துக் கொள்ளப்படுவதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட 1 ½ மாதத்துடன் ஒப்பிடுகையில் இச்செயற்திட்டம் பலவீனமாகியுள்ளமை அவதானிக்கப்பட்டது. இந்நிலமை படங்கள் 11 மற்றும் 12 இனால் தெளிவாகின்றது.





படங்கள் 11, 12 வெளிச்சுற்றுவட்ட வீதி சேதனப் பசளை உற்பத்திப் பிரிவு

கணக்காய்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 2013 மார்ச் 27 ஆந் திகதியளவில் கணதொல இடத்தில் சேதனப் பசளை தயாரித்தல் செயற்திட்டத்தினை தொடங்குவதற்காக நிலம் தயார்படுத்தப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 45,131,000 ஆன மானியம் ஐக்கிய நாடுகளின் ஆசிய பசிபிக் பொருளாதார சமூக ஆணைக்குழுவினாலும் செவனத நிறுவனத்தினாலும் இணைந்து வழங்குவதற்கும் அதனை நிர்மாணித்ததன் பின்னர் வெளிச்சுற்றுவட்ட வீதி சேதனப் பசளை உற்பத்தியினை அவ்விடத்திற்கு கொண்டு வருவதற்கும் திட்டமிடப்பட்டிருந்ததுடன்

செயன்முன்னேற்றம் குறித்து அறிவிக்கப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. படங்கள் 13 மற்றும் 14 இனால் இந்நிலமை தெளிவாகின்றது.




படங்கள் 13, 14 – முன்னேற்றப்பட்ட சேதனப் பசளை உற்பத்திப் பிரிவு

## 2.5 உக்காத கழிவுகள் நிலத்தின் மேல் குவிக்கப்படுவதனால் நிகழும் இராசயனச் செயன்முறையினால் நிலக் கீழ் நீரிற்கு ஏற்படும் பாதகமான தாக்கங்கள்.

கழிவுகளை அகற்றும் மேட்டின் சரிவில் அதிகளவான நீரூற்றுக்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அந்நீரை அருந்த முடியாதுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர். அதனால் 01 கி.மீ. தூரம் சென்று குடி நீரை எடுத்துவர வேண்டிய நிலை அவர்களிற்கு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மிக நீண்ட காலமாக இவ்வாறு குப்பைகள் குவிக்கப்பட்டு வருவவதன் காரணமாக நிலத்தின் மேல் மட்டத்திலுள்ள குப்பை படிவங்கள் ‘‘எனரொபிக்’’ நிலைக்கு உட்பட்டு நச்சுத் திரவம், ஐதரசன் சல்பைட், சல்பர் டயக்சைட் மற்றும் மெதன் போன்ற நச்சு இராசயனங்கள் உருவாகியிருக்காமையினை உறுதிப்படுத்தும் சான்றுகள் காணப்படவில்லை. இவ்வாறு ‘‘எனரொபிக்’’ நிலைக்கு உட்பட்டுள்ள குப்பைகள் காணப்படும் இடங்களில் உற்பத்தியாகும் அழுக்குத் திரவம் சாதாரண கழிவறைகளில் காணப்படும் கழிவுகளிலுள்ள நச்சுத் தன்மையிலும் பத்த மடங்கு நச்சுத் தன்மை கொண்டதாக காணப்படுகினறமை பல்வேறுபட்ட ஆய்வுகளிலுமிருந்து வெளிப்பட்டுள்ளமையால் இந்நச்சுத் திரவத்தில் செயற்படும் பெக்ரீரியாவினால் காற்றில் அல்லது நிரிலுள்ள ஒட்சிசன் அவற்றின் செயற்பாடுகளிற்காக பெருமளவில் பயன்படுத்திக் கொள்ளப்படுவதுடன் அத்திரவம் நீர் நிலைகளுடன் கலக்குமாயின் நீரில் காணப்படும் ஒட்சிசன் அந்த பக்ரீரியாக்களால் உரிஞ்சிக் கொள்ளப்படுவதனால் நீரியல்வாழ் மற்றும் நீர்த்தாவரங்கள் என்பன அருகிச் செல்வதுடன் மனித உடலிற்குள் நுளையுமாயின் மிக நீண்ட காலமாக உடலிலிருந்து செயற்பட்டு உடலுபாதைகளிற்கு உட்படுவதற்கு

சந்தர்ப்பம் உள்ளதென நகர ஆணையாளரிற்கு முகவரியிடப்பட்ட நகர பொறியியலாளரின் 31324 ஆம் இலக்க 2011 ஏப்ரல் 18 ஆந் திகதிய கடிதத்தினால் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. மேலே விபரிக்கப்பட்டவாறு அசுத்தமான நீரூற்றுக்களிலிருந்து உற்பத்தியாகும் நீர் முத்துவ கால்வாயில் கலப்பது வெளிப்பட்டது. இந்த முத்துவ கால்வாய் இறுதியில் களு கங்கையில் சங்கமிக்கின்றது. இந்நிலமை படங்கள் 15 மற்றும் 16 இனால் தெளிவாகின்றது



படம் 15 – குப்பை மேட்டின் சாரலில் அசுத்தமடைந்த நீரூற்றுக்கள்



படம் 16 – அசுத்தமடைந்த நீர் மல மீழ் சுழற்சி முறையால் நீர் நிலைகளுடன் கலத்தல்

## 2.6 முறையற்ற கழிவு முகாமைத்துவத்தினால் வயல்கள் பற்றையாதல்

குப்பை மேட்டின் சாரலில் ஏறத்தாழ 7 ½ ஏக்கர் வயல் வெளி முறையற்ற கழிவு அகற்றலால் சில வருடங்களாக பற்றைகளாக மாறியுள்ளமை அவதானிக்கப்பட்டது. குறித்த பிரதேசத்திலுள்ள கமநல சேவைகள் நிலையத்திடம் விசாரித்த போது அவ்வயல் வெளிகள் தூர்வடைவதற்கு குப்பை மேடு காரணமாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. படங்கள் 17 மற்றும் 18 இனால் இந்நிலமை தெளிவாகின்றது.





படங்கள் 17, 18 – தூர்வடைந்துள்ள வயல் வெளிகள்

# 3. கட்டுப்பாட்டு நலிவுகள்

## 3.1 சுகாதாரப் பிரிவின் ஆளணி மற்றும் வாகன நிர்வாகம்

மா நகர சபையின் சுகாதாரத் திணைக்களத்தில் சேவையாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 93 ஆகும். நாளாந்த ஊழியர்கள் வேலையில் ஈடுபடுத்தல் முறையாக இடம்பெற்றிருக்காமை அவதானிக்கப்பட்டது. வருகையினைப் பதிவுசெய்தல், வாகனங்களிற்கு எரிபொருள் நிரப்புதல் போன்றன முடிவுற்றதன் பின்னர் குப்பைகளைச் சேகரிப்பதற்காக தொழிலாளர்கள் புறப்பட்டுச் செல்வதற்கு அதிக காலம் எடுக்கின்றமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே குப்பைகளை எடுத்துவரும் வாகனங்கள் எத்தனை தடவைகள் குப்பைகளை அகற்றும் இடத்திற்கு வந்து சென்றன என்பதனைப் பரிசோதிப்பதற்கான முறைமையொன்றும் காணப்படாதுள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 3.2 காணிகள் மற்றும் ஆதனங்களின் பாதுகாப்பு

மாநகர சபைக்கு உரித்தாவுள்ள 25 ஏக்கரிற்கும் மேற்பட்ட கணாதொல குப்பைகள் அகற்றப்படும் காணி சட்டவிரோத குடியிருப்பாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் இந்த ஆதனத்தினை பாதுகாப்பதற்காக மாநகர சபையினால் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டிருக்காமை அல்லது சட்டவிரோத குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை படம் 19 இனால் தெளிவாகிறது.



படம் 19 – சட்டவிரோத குடியிருப்பாளர்கள்

## 4. நிறுவனத்தின் கருத்துரை

*இரத்தினபுரி மாநகர சபையின் நகர ஆணையாளரினால் அறிக்கையின் ஒவ்வொரு பந்தி தொடர்பிலும் கருத்துரை வழங்கப்படாதிருந்ததுடன் பொதுவாக குறிப்பிடப்பட்டிருந்த அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.*

*01. தற்போது இரத்தினபுரி மாநகர சபை அதிகாரப்பிரதேசத்தில் நாளொன்றிற்கு 46 மெ.தொன. அளவு குப்பைகள் சேகரிக்கப்படுவதுடன் அதில் நாளாந்த பொதுச் சந்தையிலிருந்து சேகரிக்கப்படும் 02 மெ.தொன் அளவு குப்பைகள் சேதனப் பசளை செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்படுகின்றது. அவ்விடத்தில் அதற்கு மேற்பட்ட அளவில் சேதனப் பசளை செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்படுகின்றது. அந்த இடத்தில் அதற்கு மேற்பட்ட அளவில் சேதனப் பசளை உற்பத்திக்கான இடவசதி இல்லை.*

*தற்போது UN HABITAT நிறுவகம் மற்றும் செவனத நிறுவனத்துடன் இணைந்து சேகரிக்கப்படும் எஞ்சிய கழிவுகளைப் பயன்படுத்தி சேதனப் பசளை செயற்திட்டத்தினை விரிவுபடுத்துவதற்கு கணாதொல இறுதி அகற்றல் இடத்தில் தேவையான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இச்செயற்திட்டத்தினை மிக விரைவில் தொடங்கியதன் பின்னர் குப்பைகளை உக்காத பொருளாக வகைப்படுத்தி வெவ்வேறாக சேகரித்து கழிவு முகாமைத்துவத்தினை முறையாகவும் சுற்றாடலிற்கு நன்மையளிக்கும் விதத்திலும் மேற்கொள்வதற்கு தேவையான சகல நடவடிக்கைகளும் தற்போது எடுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் தற்போது இடம்பெறுகின்ற சுற்றாடல் மாசடைதலை குறைத்துக் கொள்ள முடியுமென குறிப்பிடுகின்றேன்.*

*02. இச்செயற்திட்டத்திற்குத் தேவையான அறிவு மற்றும் வழிகாட்டல்கள் தற்போது செவனத நிறுவனத்தினால் பல விழிப்புணர்ச்சியூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.*

*03. கழிவு முகாமைத்துவ செயன்முறையில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கையுறைகள், மழை போர்வை போன்றன வழங்கப்பட்டுள்ளதுடன் தேவையானோருக்கு பூட்ஸ்களும் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் சகலரும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன் மேலதிக சிகிச்சைகள் தேவையானோர் தொடர்புடைய நிபுணத்துவ சிகிச்சை நிலையங்களிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.*

*04. வைத்தியசாலைக் கழிவுகளில் சிகிச்சைப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பதார்த்தங்கள் அடங்கிய கழிவுகள் வேறாக்கப்பட்டு எஞ்சிய கழிவுப் பொருட்கள் மாத்திரம் மாநகர சபையினால் எடுத்துச் செல்லப்பட்டு கணாதொல பிரதேசத்தில் கொட்டப்படுவதுடன் ஏனைய கழிவுகளை வைத்தியசாலையிலேயே அகற்றுவதற்கு விசேட வேலைத்திட்டமொன்று உள்ளது.*

*05. மலக் கழிவுகளை அகற்றல் செயற்பாடு தற்போது செயற்பாடற்றுக் காணப்படுவதுடன் தற்போது குழிகள் பறிக்கப்பட்டு அதனுள் அகற்றல் இடம்பெறுகிறது. UN HABITAT நிறுவகத்துடன் இணைந்து 2014 ஆம் ஆண்டில் அதற்காக தனியான செயற்திட்டமொன்றைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*06. தற்போது மா நகர சபை எல்லைக்குள் காணிக் கணக்கெடுப்பு இடம்பெற்று வருதனால் அதிலிருந்து கிடைக்கும் தகவலிற்கமைய காணிகள் மற்றும் ஆதனங்களிற்கான பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடுகின்றேன்.*

## 5. முடிவுகள்

இரத்தினபுரி மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் குவிகின்ற கழிவுகளை சேகரிப்பதற்கும் அகற்றுவதற்கும் அவ்வாறே ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களினால் எடுத்துவரப்படுகின்ற கழிவுகளை அகற்றுவதற்கும் சிறந்த முகாமைத்துவம் மற்றும் உபாய முறைகள் காணப்படாமையால் மக்கள் சமூகத்தின் சுகாதார நிலைக்கு குந்தகம் ஏற்படும் வகையில் தாக்கங்கள் இடம்பெறுதல், பொதுச் சொத்துக்களும் பயிர்செய்கை நிலங்களும் அழிவுறுதல், நீர் நிலைகள், நீரோடைகள், ஆறுகள் போன்றன அசுத்தமடைதல் இடம்பெறுவதுடன் இதன் மூலம் மக்கள் சமூகத்திற்கும் அவ்வாறே இயற்கைச் சூழலிற்கும் பாதகமான தாக்கங்கள் இடம்பெற்றுள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 6. பரிந்துரைகள்

கழிவு முகாமைத்துவ செயன்முறையில் நிலவும் குறைபாடுகள் காரணமாக மக்களின் உயிர்வாழ்வு, பொதுச் சொத்துக்கள், பயர்ச்செய்கை நிலங்கள் மற்றும் சுற்றாடலிற்கு ஏற்படும் தாக்கங்களைக் குறைத்துக் கொள்வதற்காக பின்வரும் பிரேரணைகள் முன்மொழியப்படுகின்றன.

01. மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் குவிகின்ற குப்பைகளை சேகரித்தல், வகைப்படுத்தப்பட்டு இடம்பெறுதல் மற்றும் அவற்றை அகற்றுவதற்காக காணப்படுகின்ற பிரிவுகளில் சிறந்த முகாமைத்துவத்தினூடாக கழிவுகளை சேதனப் பசளை உற்பத்திச் செயற்திட்டம் வரைக்கும் குப்பைகள் அகற்றல் செயன்முறையினை விரிவுபடுத்துவதன் மூலம் மாநகர சபைக்கு மேலதிக வருமான மூலமொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

02. உக்காத கழிவுகளைச் சேகரித்து விற்பனை செய்வதன் ஊடாக மேலதிக வருமான மீட்டல் வாய்ப்பினை வளர்த்துக் கொள்ள முடியுமாவதுடன் இக்குப்பைகளை சபையின் சொத்தாக மாற்றுவதற்குள்ள வாய்ப்பினை ஆய்ந்தறிந்து நடவடிக்கை எடுத்தல்.

03. கழிவு முகாமைத்துவ செயன்முறைக்காக தற்போது பயன்படுத்தியுள்ள மனித மற்றும் பௌதீக வளங்களிலிருந்து உச்ச பயனைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் உபயோகப்படுத்தல் மற்றும் அண்மையிலுள்ள பாடசாலைகளை இக்கருமத்துடன் இணைத்துக் கொள்ளல்.

04. இச்செயற்திட்டத்திற்குத் தேவையான முகாமைத்துவ அறிவு மற்றும் அனுபவங்களை மாவட்டத்தில் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் வெற்றிகரமான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

05. கழிவு முகாமைத்துவ செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்காக தேவையான சட்டரீதியான முறைகளை செயற்படுத்துதல்

06. மாநகர சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் ஆதனங்களின் பாதுகாப்பிற்காக முறையான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் மற்றும்,

07. வைத்தியசாலைக் கழிவுகள் மற்றும் வீசப்படும் தொலைபேசி சிம் அட்டைகள், சீளவ்எல் மின் குமிழ்கள் அடங்கலான கதிர்வீச்சு மற்றும் இராசயனக் கூட்டுக்கள் கொண்ட கழிவுகளை அகற்றுவதற்காக முறையான நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தல்.

**எச்.ஏ.எஸ். சமரவீர**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி